# விவிலியத் தொடர் வினா விடைப் போட்டி

(மத்தேயு நற்செய்தி அதிகாரம் 14~15)

I.சரியான பதிலைத் தேர்ந்தெடுத்து எழுதவும்:

1.இயேசு கடலில் நடந்து வந்த போது அச்சத்தினால் அலறியவர்கள் யார்?

1. பொது மக்கள்
2. நோயுற்றவர்கள்
3. மீனவர்கள்
4. சீடர்கள்

2. துணிவோடு இருங்கள் நான்தான் அஞ்சாதீர்கள் என்று கூறியவர் யார்?

1. பேதுரு
2. இயேசு கிறிஸ்து
3. யாக்கோபு
4. இறைவாக்கினர்

3. ஆண்டவரே நீர்தாம் என்றால் நானும் கடல்மீது நடந்து உம்மிடம் வர ஆணையிடும் என்று கூறியவர் யார்?

1. குருடன்
2. பேதுரு
3. யோவான்
4. முடவன்

4. கடலில் நடந்த சீடர் யார்?

1. யாக்கோபு
2. தோமா
3. மத்தேயு
4. பேதுரு

5. மத்தேயு 14ம் அதிகாரத்தில் "ஆண்டவரே, என்னைக் காப்பாற்றம் என்று கத்தியவர் யார்?

1. பரிசேயன்
2. பேதுரு
3. யூதாஸ்
4. லூக்கா

6. "நம்பிக்கை குன்றியவனே, ஏன் ஐயம் கொண்டாய் எனறு இயேசு யாரைப் பார்த்துக் கேட்டார்?

1. மரிய மகதலேன்
2. பேதுரு
3. ஏரோது
4. ஊதாரி மைந்தன்

7. மத்தேயு 14ம் அதிகாரத்தில் இயேசு கிறிஸ்து கெனசரேத்துப் பகுதியில் இருந்தபோது, அவருடைய மேலாடையை தொட்டவுடன் நலம் பெற்ற மக்கள் யார்?
   1. தொட்டவர்கள் யாவரும்
   2. நோயுற்றவர்கள்
   3. தொழுநோயாளர்கள்
   4. பரிசேயர்கள்

8. மத்தேயு 15ம் அதிகாரத்தில் இயேசு பரிசேயரை எப்படி அழைத்தார்?
   1. குருடர்களே
   2. அன்பர்களே
   3. வெளிவேடக்காரரே
   4. அறிஞர்களே

9. ''வாய்க்குள் செல்வது மனிதரைத் தீட்டுப்படுத்தாது, மாறாக வாயிலிருந்து வெளிவருவதே மனிதரைத் தீட்டுப் படுத்தும் என்று கூறியவர்?
   1. திருமுழுக்கு யோவான்
   2. இயேசு கிறிஸ்து
   3. இறைவாக்கினர்
   4. லூக்கா

10. ''என் விண்ணகத் தந்தை நடாத எந்த நாற்றும் வேரோடு பிடுங்கப்படும்'' என்று கூறியவர்?
   1. பரிசேயர்
   2. சீடர்
   3. மக்களில் ஒருவர்
   4. இயேசு கிறிஸ்து

## II. சரியான விடை எழுதவும்:

1. மத்தேயு நற்செய்தி 15ம் அதிகாரத்தில் பரிசேயரும் மறைநூல் அறிஞரும் இயேசுவிடம் கேட்ட கேள்விகள் என்ன?

2. இம் மக்கள் உதட்டினால் என்னைப் போற்றுகின்றனர் இவர்கள் உள்ளமோ என்னைவிட்டு வெகு தொலைவில் இருக்கிறது என்று கூறிய இறைவாக்கினர் யார்?

3. என் விண்ணகத் தந்தை நடாத எந்த நாற்றும் வேரோடு பிடுங்கப்படும் என்று இயேசு யாரைக் குறித்து கூறினார்?

4. குருட்டு வழிகாட்டிகள் என்று இயேசு யாரைக் குறித்து கூறினார்?

5. பார்வையற்ற ஒருவர் பார்றையற்ற வேறொருவரை வழிநடத்தினால் இருவரும் எங்கே விழுவர்?

6. கானானியப் பெண் இயேசுவிடம் என்ன உதவி கேட்டார்?

7. நம்க்குப் பின்னால் கத்திக் கொண்டு வருகிறாரே, இவரை அனுப்பிவிடும் என இயேசுவிடம் வேண்டியவர்கள் யார்?

8. இஸ்ரயேல் குலத்தாருள் காணமாற்போன ஆடுகளாய் இருப்போரிடம் அனுப்பப்பட்டவர் யார்?

9. பிள்ளைகளுக்குரிய உணவை எடுத்து நாய்க் குட்டிகளுக்குப் போடுவது முறையல்ல என்று யார் கூறியது?

10. தங்கள் உரிமையாளரின் மேசையிலிருந்து சிறு துண்டுகளை நாய்குட்டிகள் தின்னுமே என்று இயேசுவிடம் சொன்னது யார்?

11. இயேசு இறுதியாக கானனானியப் பெண்ணிடம் கூறிய பதில் என்ன?

12. மத்தேயு நற்செய்தியில் 15ம் அதிகாரத்தில் இயேசு மலையின் மீது அமர்ந்திருந்தபோது எத்தனை வைகையான நோயாளர்களை மக்கள் அவரிடம் கொண்டு வந்தனர்?

13. மத்தேயு நற்செய்தியில் 15ம் அதிகாரத்தில் இயேசு யாரிடம் பரிவு கொண்டார்?

14. நாலாயிரும் பேருக்கு உணவு அளித்த புதுமையில் ஏழு அப்பங்களையும் சில மீன்களையும் அனைவரும் வயிறார உண்டபின் எத்தனை கூடைகளில் நிறைய எடுத்தனா?

15. வாயினின்று வெளிவருபவை உள்ளத்திலிருந்து வருகின்றன. அவையே மனிதரைத் தீட்டுப்படுத்துகின்றன என்று கூறியது யார்?